சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 203/2012**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – பி.வா.சா. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 13.07.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026ஆண்டு ஜுலை 13ம் நாள் சாட்சியம்.

---

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்களது விவசாய பூமிகளை எனது தகப்பனார் பார்த்துக் கொள்கிறார் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்தாகும். 1ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனாரான 2ம் பிரதிவாதி ஒரே மகன் ஆவார். எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனது அப்பாவிற்கும், எனது தாத்தாவிற்கும் சரிபாதி என்றால் சரிதான். எனது அப்பா மற்றும் எங்களுக்கு எதிராக தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்குச் சொத்தினைப் பொறுத்து வாதிகளால் அ.வ.எண்.294/2003 என்ற வழக்கை கிரையம் செய்து கொடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றும் அந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அ.வ.எண்.270/2004 ஆக மாற்றம் செய்யப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கானது எங்களால் எதிர்வாதம் செய்யப்பட்ட நிலையில் 27.02.2007–ம் தேதியில் வழக்குச் சொத்தில் பொதுவில்

சரிபாதியை கிரையம் செய்து கொடுப்பதற்கு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் 12.04.2011–ம் தேதியில் நீதிமன்றத்தால் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த கிரையத்தைப் பொருத்த சொத்துக்களை 19.03.2012–ம் தேதியில் இந்த வழக்கின் வாதிகள் நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுகளில் எங்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்றால் எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை.

2. வழக்குச் சொத்தில் எங்களது பாத்தியமானது நீதிமன்றத்தின் மூலம் ஏற்கனவே வாதிகளால் கிரையம் பெறப்பட்டுள்ள நிலையில் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ஆகிய எங்களுக்கு வழக்குச் சொத்தில் எந்த பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி உடல்நிலை பாதிக்கப்பட்டு 3,4–வது பிரதிவாதிகளான எங்களுடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். எங்களுக்கும், எங்களது அப்பாவிற்கும் இடையே எவ்வித கருத்து வேறுபாடும் நாளது தேதி வரை கிடையாது. இந்த வழக்கின் பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக, ஒரே வீட்டில் வசித்து வந்தோம். 1,2–வது பிரதிவாதிகள் தான் எங்களை படிக்க வைத்தார்கள்.

3. வழக்குச் சொத்தில் பாகம் கோரி அ.வ.எண்.147/2013 என்ற வழக்கினை தாராபுரம் சார்வு நீதிமன்றத்தில் நானும், எனது சகோதரர்களும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கானது எந்த வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்தேன் என்றால் எனக்குத் தெரியாது. நான் அ.வ.எண்.147/2013–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கறிஞரை பார்த்தது கிடையாது. அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று எனக்குத்

தெரியாது. தற்போதைய வழக்குச் சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. இந்த வழக்குச் சொத்தில் 5/6 பாகம் பாத்தியம் உள்ளது என்று நான் கூறுகிறேன். எனது தாத்தா மற்றும் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட பங்கில் உயில் மற்றும் எனது அப்பாவின் சொத்தில் எனக்கு கிடைக்கும் பாக அடிப்படையில் 5/6 பாகம் பாத்தியம் என்று கூறுகிறேன்.

4. அ.வ.எண்.270/2004–ல் ஏற்பட்ட தீர்ப்பிற்கு எதிராக 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை. அந்த தீர்ப்பின் அடிப்படையில் நீதிமன்றம் எழுதிக் கொடுத்துள்ள கிரையப் பத்திரத்தை ஆட்சேபணை செய்து நாங்கள் எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை. நீதிமன்றத்தின் மூலம் வாதிகள் அந்த வழக்கில் சுவாதீனம் பெற்ற போது நாங்கள் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை.

5. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த உயில்சாசனத்தை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. உயில் சாசனத்தில் ரேகை மற்றும் கையொப்பம் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது. உயில் சாசனத்தை வளையக்காரன்வலசு பழனிச்சாமி என்னிடம் கொடுத்தார். எனது தாத்தா இறந்து சுமார் 1 1/2 மாதத்தில் என்னிடம் கொடுத்தார். எனது தாத்தா இறந்த தேதி எனக்குத் தெரியாது. எனது தாத்தா இறப்பதற்கு முன்பு சுமார் 5 மாதங்களாக படுத்த படுக்கையாக இருந்தார். உயில்சாசனத்தை வளையக்காரன்வலசு பழனிச்சாமி என்னிடம் கொடுத்த தேதி தெரியாது. வீட்டில் வந்து என்னிடம் கொடுத்தார். அந்த உயில்சாசனத்தை எனது அப்பாவிடம் கொடுக்கவில்லை. நேரடியாக என்னிடம் தான் கொடுத்தார். உயில்சாசனத்தை அவர் கொடுத்த போது எனது அப்பா வீட்டில் இல்லை.

உயில்சாசனத்தை நான் படித்துப் பார்த்தேன். அந்த உயில்சாசனத்தில் கையொப்பம் செய்துள்ள சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் சிவக்குமார் ஆகியோர்கள் எனது சித்தப்பா ஆவார்கள். உயில்சாசனத்தை எழுதியவர் எனக்கு மாமா உறவு. அவரது பெயர் எனக்குத் தெரியவில்லை. உயில்சாசனத்தை எழுதியவர் என்ன படித்துள்ளார் என்று எனக்குத் தெரியாது.

6. உயில் எழுதிய போது பழனிச்சாமி உடனிருந்ததாக என்னிடம் சொன்னார். உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று பழனிச்சாமி என்னிடம் சொல்லவில்லை. இந்த உயிலை எழுதிய நபர் வேறு ஆவணங்கள் எதுவும் எழுதியுள்ளாரா என்று எனக்குத் தெரியாது. உயில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களின் விஸ்தீரணம் மற்றும் புல எண் எனக்குத் தெரியாது. உயிலை எனது தாத்தா எனக்கும், எனது சகோரருக்கும் சேர்த்து எழுதி வைத்துள்ளார்.

7. வாதிகளின் சரிபாதி பாத்தியத்தை பொறுத்து எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் எங்களது அப்பா பங்கில் எங்களுக்கு பாத்தியம் உள்ளது. நீதிமன்றம் மூலம் வாதிகள் கிரையம் பெற்றுள்ளதால் எங்கள் அப்பாவின் பங்கில் எங்களுக்கு உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் பரிகாரம் பெறக் கூடாது என்றா காரணத்தினால் பொய்யான சங்கதிகளைக் கூறி பொய்யான உயிலை தாக்கல் செய்து இந்த வழக்கினை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் அனைவரும் பொய்யான எதிர்வாதம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கு சொத்து குறித்தோ, வழக்கு குறித்தோ எனக்கு தெரியாது என்றும், எனது அப்பா சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால்

சரிதான். வழக்குச் சொத்தில் வாதிகளின் பாகத்தை நான் ஆட்சேபணை செய்ய இயலாது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.